**ஸ்டான்டட் சாட்டட்**
**உள்நாட்டு பிற்சேர்க்கை**
**(இலங்கை)**

இலங்கையில் அல்லது இலங்கைக்குள் வழங்கப்படும் சேவைகளுக்கான உடன்படிக்கை பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படும்.

பயன்படுத்தப்பட்ட ஆனால் உள்நாட்டு பிற்சேர்க்கையில் வரைவிலக்கணப்படுத்தப்படாத பதங்கள் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட அர்த்தத்தைக் கொள்ளும்.

**கணக்கு வாசகங்கள் தொடர்பான உள்நாட்டு பிற்சேர்க்கை**

1.செயலற்ற கணக்கு மற்றும் கைவிடப்பட்ட ஆதன நடபடிகள்

**செயலற்ற கணக்கு-**
சேமிப்புக் கணக்கு இரண்டு வருடங்களுக்கும், நடைமுறைக் கணக்கு ஒரு வருடத்திற்கும் பணப்பரிமாற்றங்கள் இடம்பெறாதவிடத்து குறித்த கணக்கானது செயலற்ற கணக்கு என வகைப்படுத்தப்படும். செயலற்ற கணக்கை மீளச் செயற்படுத்துவதற்கு முழுமையான பாவனையாளர் கவனத்தராதர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**கைவிடப்பட்ட ஆதனம்-**
ஒரு கணக்கு 10 வருடங்களாகச் செயலற்றதாக இருப்பின் அது செயலற்றதாகக் கருதப்படும். நாம் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட கைவிடப்பட்ட ஆதனம் தொடர்பான விதிமுறைகளுடன் இணங்குவோம்.

செயலற்ற கணக்கு மற்றும் கைவிடப்பட்ட ஆதனம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு உங்களுடைய தொடர்பு முகாமையாளரினை நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

**உள்நாட்டு பிற்சேர்க்கைக்கான பொது விதிகள்**

1.தகவல் வெளிப்படுத்துகை

வாசகம் (தகவல் வெளிப்படுத்துகை) பின்வரும் சொற்பதங்கள் சேர்க்கப்படும்.

இந்த வாசகத்தில் குறிப்பிடப்பட்ட திறத்தவர்களுக்கு இத்தகைய நோக்கங்களுக்காக உங்களுடைய தகவல்கள் எம்மால் வெளிப்படுத்தப்படலாம்.

(a)உங்களுடைய வங்கிச் செயற்பாடுகள் பற்றிய புரிதல்கள்

(b)இடர் முகாமைத்துவம்

(c)வெளியாட்களிடம் பணி ஒப்படைப்பு அல்லது எமது செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பு

(d)ஏதேனும் சொத்து விற்பனை அல்லது வியாபார நடவடிக்கை

(e)கடன் பாதுகாப்புப் பெறுதல் ; அல்லது

(f) குறிப்புக்கள் சம்பந்தமாக எழக்கூடிய விஷயங்களைப் பொறுப்பேற்றல்

**தகவல்**

சிறிய மற்றும் நடுத்தர நிறுவன வங்கிச் செயற்பாடுகள் தொடர்பான ஏதேனும் விசாரணை, சேவைக்கான கோரிக்கை, புகழுரை அல்லது முறைப்பாடுகளுக்காக பின்வரும் வழிகளில் எம்மைத் தொடர்பு கொள்ளலாம்.

தொலைபேசி: +94 112 480444 (காலை 8:30 - மாலை 5:00)

மின்னஞ்சல்: Feedback.CB@sc.com

முகாமையாளர் வாடிக்கையாளர் சேவை பிரிவு, ஸ்டான்டட் சாட்டட் வங்கி, இலக்கம்.37, யோக் வீதி, கொழும்பு 1, இலங்கை.

இணைய தளம்: www.sc.com/lk

உங்களுடைய முறைப்பாடு எமக்குக் கிடைக்கபெற்று 10 தினங்களுக்குள் நாம் நடவடிக்கை மேற்கொள்வோம். முறைப்பாட்டுக்கான திருப்திகரமான பதிலை நீங்கள் பெறாதவிடத்து, அதனை நிவர்த்தி செய்ய வேறு வழிகளைப் பின்பற்றலாம், இலங்கை நிதிசார் ஒம்புட்ஸ்மனை அணுகலாம். தொலைபேசி: 2595628